**செய்தி வெளியீடு எண்: 421** **நாள்: 29.02.2024**

## சென்னை மாவட்ட கூட்டுறவு சங்கங்களில்
## பண்ணை சாரா கடன்களுக்கு சிறப்பு கடன் தீர்வு திட்டம்

சென்னை மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் பண்ணைசாரா கடன்கள் மற்றும் இதர நீண்டகால நிலுவை கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வு திட்டத்திற்கான சிறப்பு முகாம் சம்மந்தப்பட்ட வங்கியின் கிளைகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் மார்ச் 02–ஆம் தேதி நடைபெற உள்ளதாக சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் திருமதி. ந.மிருணாளினி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பின்படி, கூட்டுறவு சங்கங்களில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள தவணை தவறிய பண்ணைசாராக்கடன்கள் மற்றும் இதர நீண்டகால நிலுவை இனங்களுக்கு சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் கூட்டுறவு துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்களில் பெற்றுள்ள சிறு வணிக கடன், போக்குவரத்து கடன், கைத்தறிக்கடன், தொழிற்கடன், வாணிபக்கடன்கள், பத்திர ஈட்டுக்கடன்கள், வீடு கட்டும் கடன், மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்கள், ஆடவர் சுய உதவிக்குழுக் கடன்கள், கூட்டுப்பொறுப்புக்குழு கடன்கள், தாட்கோ, டாம்கோ மற்றும் டாப்செட்கோ போன்ற கடன்களில் 31.12.2022 அன்று கடனை திரும்ப செலுத்த வேண்டிய காலக்கெடு முழுமையாக முடிவடைந்து தவணை தவறி நிலுவையிலுள்ள அனைத்து பண்ணைசாராக் கடன்கள் இத்திட்டத்தில் தகுதி பெறும்.

இத்திட்டத்தில் பயன்பெற கடன்தாரர், இத்திட்டத்தின் படி கணக்கிடப்ட்ட நிலுவைத்தொகையில் 25 சதவீத தொகையை அரசாணை வெளியிடப்பட்ட நாளான 13.12.2023 முதல் மூன்று மாதத்திற்குள் செலுத்தி வங்கி சங்கத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.

மீதமுள்ள 75 சதவீத தொகையை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட நாளில் இருந்து 6 மாத காலத்திற்குள் அதிகபட்சமாக 6 தவணைகளுக்குள் செலுத்த வேண்டும். கடன் வழங்கப்பட்ட தேதியில் இருந்து ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாள் முடிய அசலுக்கு 9 சதவீத சாதாரண வட்டி வசூலிக்கப்படும். கூடுதல் வட்டி, அபராதவட்டி, இதர செலவினங்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

இத்திட்டம் 13.12.2023 முதல் செயல்பாட்டுக்கு வந்து அரசாணைப்படி செப்டம்பர் 2024 வரை அமலில் இருக்கும்.

எனவே தகுதி வாய்ந்த கடன்தாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி தொடர்புடைய கூட்டுறவு நிறுவனங்களை உடன் அணுகி பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in